06.10.2025

/2/

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.136/2008**

**பி.வா.சா. 4–விஜயலட்சுமி, க/பெ.சுப்பிரமணி**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் எதிர்வாதி மகேந்திரன் உடன்பிறந்த தம்பி ஆவார். நான் திருமணம் ஆனதிலிருந்து அக்கரைப்பட்டியில் தான் வசித்து வருகிறேன். 1955ம் ஆண்டில் நான் பிறந்தேன். தற்போது வயது எனக்கு 70. நான் தாக்கல் செய்த முதன்மை சத்திய பிரமாண வாக்குமூலத்தை படித்து காண்பித்தார்கள். நான் தாக்கல் செய்த முதன்மை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 55 வயது என போட்டிருந்தார்கள். சாட்சி மீண்டும் ஆதார் அட்டை அடிப்படையில் நான் தாக்கல் செய்த முதன்மை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 65 வயது தான் குறிப்பிட்டுள்ளார்கள் என்று கூறுகிறார். நான் தாக்கல் செய்த முதன்மை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 65 வயது என குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளதை பொறுத்து நான் ஆட்சேபனை செய்யவில்லை. நான் 20 வயதில் திருமணம் ஆகி அக்கரைப்பட்டியில் வசிக்க சென்றுவிட்டேன்.

06.10.2025



1975 ம் ஆண்டு திருமணம் நடைபெற்று அக்கரைப்பட்டிக்கு வசிக்க சென்றுவிட்டேன் என்றால் சரிதான். என் தகப்பனார் பெயர் கோவிந்தசாமி, என் தகப்பனாரின் தகப்பனார் பெயர் தெரியாது. என் தகப்பனார் கோவிந்தசாமிக்கு பூர்வீகமான ஊர் திருவெள்ளாரைக்கு அருகே கீராம்பாளையம் என்ற கிராமம் என்றால் சரிதான். அக்கரைப்பட்டி என் தகப்பனாருக்கு பூர்வீகமாக ஊர் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து என் அம்மாவுக்கு பூர்வீகமானதா என் தகப்பனாருக்கு பூர்வீகமானதா என்றால் அது நத்தமாகும். கிராமப்பகுதியில் குடியிருக்கும் பகுதியை தான் நத்தம் என்று சொல்வார்கள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்திற்கு என்னுடைய தகப்பனார் கோவிந்தசாமி பெயரில் 1 ம் பிரதிவாதி மகேந்திரன் பட்டா பெற்றார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு 1975 ம் ஆண்டு திருமணத்திற்கு பிறகு அக்கரைப்பட்டிக்கு செல்லும் வரை பட்டா இல்லை என்றால் சரிதான். என் தம்பி சொத்து நத்தம் என்று சொன்னால் சரிதான். என் தம்பி சொத்திற்கு தெற்கு திசையில் பெரியம்மாள் என்பவர் தற்போது வீடு கட்டியுள்ளார். அது ஓட்டுவில்லை வீடாகும். நான் தாக்கல் செய்த முதன்மை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் அதில் ஓட்டுவில்லை வீடு தான் என படித்து காண்பித்தார்களா என்றால் நான் அவ்வாறு ஒட்டுவில்லை வீடு என்று

தான் சொல்லியுள்ளேன். நான் தவறாக சொல்கின்றேன், நான் தாக்கல் செய்த முதன்மை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 2 வது பத்தியில் ஆஸ்பெட்டாஸ் சீட் வீடு என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், நான் அவ்வாறு சொல்லவேயில்லை. தாவா சொத்திற்கு என் தம்பி பெயரில் 1993 ம் ஆண்டு பட்டா வழங்கினார்கள். பெரியம்மாள் தாவா சொத்தின் அருகில் 1993 ம் ஆண்டுக்கு முன்பே கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான், சாட்சி மீண்டும் பெரியம்மாள் கிரையம் வாங்கவில்லை என்று கூறுகிறார். நான் தாக்கல் செய்த முதன்மை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி எண் 3 ல் பெரியசாமி முத்துராஜாவிடமிருந்து கிரையம் வாங்கியதாக கூறியிருப்பது தவறு. என் தகப்பனார் வெளியூரிலிருந்து தாவா சொத்திற்கு பிழைப்பிற்காக வந்ததால் அரசாங்கம் தாவா சொத்தை பொறுத்து என் தம்பியின் பெயரில் அடமானம் செய்து பட்டா வழங்கியது என்று சொன்னால் சரிதான், அந்த அடமானத்தை நான் பார்க்கவில்லை. பட்டாவை நான் பார்க்கவில்லை, ஆனால் வாங்கியதாக சொன்னார்கள். வாதி பெரியம்மாள் தென்வடலில் எத்தணை அடிக்கு வீடு கட்டியுள்ளர்கள், எத்தணை அடிக்கு இடம் விட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது.

06.10.2025



என் தம்பி மகேந்திரன் வீட்டிற்கு தெற்கு திசையில் எத்தனை சுவர்கள் உள்ளது என்றால் தாய் சுவர் மட்டும் தான் உள்ளது, சுற்றுசுவர் கிடையாது. பெரியம்மாள் வீடு கட்டிய ஆண்டு எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, ஓட்டுவில்லை வீடு 20 வருடங்களுக்கு முன்பு கட்டினார். என் தம்பி மகேந்திரனுக்கு அடமானம் பெற்ற நத்தத்தில் எத்தனை அடி வீடு கட்டியுள்ளார் என்ற விவரம் தெரியாது என்று சொன்னால் சரியல்ல, என் தம்பி வீட்டிற்கு வடபுறத்தில் ஒரு பாகம் அளவிற்கு காலியிடம் விட்டுள்ளார்கள். வீடு எத்தனை அடி கட்டியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி பெரியம்மாள் வழக்கு என்னவென்று எனக்கு தெரியாது. வாதி பெரியம்மாள் இவ்வழக்கில் எத்தனை அட்டவணை சொத்து காண்பித்துள்ளார் என்ற விவரம் தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த முதன்மை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி எண். 6 ல் நான் கூறியுள்ளவாறு எ மற்றும் பி அட்டவணை சொத்து பற்றி தெரியாது என்று சொன்னால் சரிதான். வாதி பெரியம்மாளின் ஓட்டுவில்லை வீட்டின் வடபுற சுவற்றிற்கு வடக்கே எங்கள் வீட்டை ஒட்டி ஓடு நீட்டியுள்ளது. சுவற்றிலிருந்து ½ அடி தான் நீட்டியுள்ளது. அவ்வாறு நான் சொல்வது போன்று சுவற்றிலிருந்து ½ அடி நீட்டியுள்ளதாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல.

வாதி பெரியம்மாள் ஆடு மாடு வைத்து விவசாயம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். பெரியம்மாள் தன் வீட்டிற்கு வடபுறம் வடக்கே 6 அடி நிலம் விட்டு ஆடு மாடு கட்டுவதற்காக பயன்படுத்தி வருகிறார், அந்த நிலத்தை 1ம் பிரதிவாதி என் தம்பி மகேந்திரன் தொந்தரவு செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என் தம்பி மகேந்திரனுக்கு ஆதரவாக நான் தாக்கல் செய்த முதன்மை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் எனக்கு தெரியாது சங்கதிகளை பற்றி குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என் தம்பி மகேந்திரனுக்கு பட்டா வழங்குவதற்கு முன்பாகவே வாதி பெரியம்மாள் கிரையம் பெற்றுவிட்டார், அந்த கிரையம் தான் செல்லும் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.